## சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

முன்னிலை:- முனைவர் L.S. சத்தியமூர்த்தி, எம்.ஏ., எம்.எல்., பி.எச்.டி.,

அமர்வு வழக்கு எண் 38/2009

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 8 (LW- 11 ) | நாள் | 25.02.2026 |
| பெயர் | S. சுப்ரமணியம் | தொழில் | |
| தந்தை பெயர் | | கிராமம் | |
| தாலுக்கா | | வயது | |

(குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சாட்டப்பட்ட நபர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு காணொலி மூலம் உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் நாகப்பட்டினம் மாவட்டம் கரியாப்பட்டினம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்தபோது 31.07.2008 ஆம் ஆண்டு பணிஓய்வு பெற்றேன். கடந்த 10.06.2007 அன்று பூம்புகார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது பூம்புகார் காவல் நிலைய குற்ற எண். 123/2007, ச/பி. 147, 341, 332 & 3(1) TNPPDL Act வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 10.06.2007 அன்று இரவு 9.30 மணிக்கு சம்பவ இடமான தர்மகுளம் சென்றும் பூம்புகார் ஜவுளிக்கடை எதிரில் சம்பவ இடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பாண்டியன், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலையில் பர்வை மகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்தேன். அவை **அசாஆ 4 மற்றும் 5** ஆகும். சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். மேலும் இவ்வழக்கின் எதிரி அகோரம் நீதிமன்றத்தில் ஆஜராகி 13.07.2007 அன்று பிணையில் வந்தார் என்பதை தெரிந்து கொண்டேன். மற்ற எதிரிகள் சோமசுந்தரம், ரமேஷ், கதிரவன், செந்தில், வீரமணி ஆகியோர் 07.08.2007 அன்று நாகை அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராகி பிணையில் வந்த விவரம்

J-S 25/2/26

தெரிந்து கொண்டேன். 10.08.2007 அன்று மயிலாடுதுறை அரசு மருத்துவமனை சென்று டாக்டர் திரு. சம்பத்குமார் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சேதம் ரூபாய் இருநூற்று ஐந்து என்பதற்காக தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் வழங்கிய சேதமதிப்பு சான்று **அசாஆ** 6 ஆகும். என்னுடைய விசாரணை முடித்து எதிரி அகோரம் மீது 147, 341, 332 இதச பிரிவிலும் மற்ற எதிரிகள் மீது 147, 341, 332 & 3(1) TNPPDL Act பிரிவுகளின் கீழ் இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**குற்றம் சாட்டப்பட்ட நபர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கில் நான் பொய்யாக கொடுக்கப்பட்ட புகாரை பெற்று சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தவறாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சாட்சிகளை நான் சொன்னபடி சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. எந்த தடய பொருட்களையும் சட்டப்படி கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த குற்ற சம்பவத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான் முறையாக விசாரணை எதுவும் செய்யாமல் குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

[signature] 25.2.26

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

[signature] 25/2/26
மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

Evidence recorded on V.C
[signature] 25/2/26

V.C. CO-ORDINATOR:
G.R. [signature]
25/02/2026
G.R. HARISH,
ASSISTANT PROGRAMMER,
PRINCIPAL DISTRICT COURT,
COIMBATORE.